<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

இ.எ.எண். 58/2018

இ.பி.எண்.32/11

இன்று 2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14 ஆம் நாள் இன்று இந்த ம.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆர்.கார்த்திகேயன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி |
| தந்தை பெயர் | : | காளியப்ப கவுண்டர் |
| வயது | : | 80 |

<u>முதல் விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

10.03.1981ம் தேதியிட்ட அம்மணி அம்மாள் மற்றும் 9 நபர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆகும்.

1.10.1989 பெரியசாமி மற்றும் நாராயணன் ஆகியோர் இடையே ஏற்பட்ட அசல் கிரய ஒப்பந்தம் ம.சா.ஆ.2

3.5.1991ம் தேதியிட்ட பெரியசாமிக்கு நாராயணன் எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3

3.5.1991ம் தேதியிட்ட தேன்மொழி என்பவருக்கு ராஜு மற்றும் ஒருவர் எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4

3.5.1991ம் தேதியிட்ட தேன்மொழி என்பவருக்கு ரொக்கராஜு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5

பெரியசாமி பெயரிலுள்ள சொத்து வரி ரசீதுகள் 9 எண்ணிக்கை ம.சா.ஆ.6

பெரியசாமி பெயரிலுள்ள மின் கட்டண ரசீதுகள் ம.சா.ஆ.7

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-R.Karthikeyan
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்